Reg. No. | 1 | 2 | 4 | 1 | 2 | X |

## காலாண்டு பொதுத் தேர்வு – செப்டம்பர் 2017

பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்:3.00மணி பொருளியல் மொத்த மதிப்பெண்கள் :200

அறிவுரை : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டும் எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி–அ

குறிப்பு: எல்லா வினாக்களும் விடையளிக்கவும் :

I.சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. 14 × 1=14

1. கிடைப்பருமை இலக்கணத்தின் ஆசிரியர்
அ) ஆடம்ஸ்மித் ஆ) சாமுவேல்சன் இ) ஆல்பிரட் மார்ஷல் ஈ) இலயனல் ராபின்ஸ்
2. பொருளாதாரத்தில் நாம் பயன்படுத்துவது
அ) பகுத்தாய்வு முறை ஆ) தொகுத்தாய்வு முறை இ) இரண்டுமே ஈ) எதுவுமில்லை
3. முதலாளித்துவத்தை இயக்கும் அடிப்படை சக்தியாக விளங்குவது
அ) திட்டமிடல் ஆ) தொழில்நுட்பம் இ) அரசு ஈ) இலாபம்
4. பயன்பாடு என்பது அ) சமூக கருத்து ஆ) உள்ளுணர்வு சார்ந்த மற்றும் உளவியல் இ) அரசின் கருத்து ஈ) அறிவியல் கருதது
5. நுகர்வோர் எச்சம் என்பது அ) தகுவிலை - உண்மை விலை
ஆ) MVn–TVn–TVn-1 இ) தேவை=அளிப்பு ஈ) இல்லை
6. தேவை விதி உணர்த்துவது அ) விலைப் பண்டங்களுக்கு உள்ள தலைகீழ் உறவு ஆ) விலை பண்டங்களுக்கு உள்ள நேரடி உறவு இ) இரண்டும் ஈ) எதுவுமில்லை
7. தேவையின் அதிகரிப்பை இதன் மூலம் காணலாம் அ) தேவைக்கோடு இடம்பெயர்வது ஆ) ஒரே தேவை வளைகோட்டில் நகர்ந்து செல்லுதல் இ) தேவை வளைகோட்டின் உச்ச புள்ளி ஈ) தேவை வளைகோட்டின் கீழ் புள்ளி
8. சமநிலை விலையில் காலத்தின் பங்கை அறிமுகப்படுத்தியவர்
அ) J.R. ஹிக்ஸ் ஆ) J.M. கீன்ஸ் இ) ஆல்பிரட் மார்ஷல் இ) J.S. மில்
9. நீண்ட காலத்தில் அ) எல்லா காரணிகளும் மாறும்
ஆ) மாறும் காரணிகள் மட்டும் மாறும் இ) மாறாக் காரணி மட்டும் மாறும்
ஈ) மாறும் மற்றும் மாறாக் காரணிகள் நிலையாக இருக்கும்
10. உழைப்பை ---- இருந்து பிரிக்க முடியாது
அ) முதல் ஆ) உழைப்பாளரிடம் இ) இலாபம் ஈ) உற்பத்தி அமைப்பு
11. முதலுக்கு அளிக்கப்படும் ஊதியம்
அ) வட்டி ஆ) இலாபம் இ) கூலி ஈ) வாடகை
12. சமூகச் செலவு என்பவை அ) நிறுவனங்களை ஏற்றுக் கொள்வதில்லை
ஆ) சமுதாயம் ஏற்கும் செலவு இ) உடல்நலத்திற்கு தீங்கு விளைவிப்பது
ஈ) மேற்காணும் அனைத்தும்
13. சராசரி மாறாச் செலவு இதனால் வகுக்கும்போது கிடைக்கும்
அ) TC/Q ஆ) TFC/Q இ) TVC/Q ஈ) ஏதுமில்லை
14. விற்பனைச் செலவின் மிக முக்கியமான வடிவம் என்பது
அ) விளம்பரங்கள் ஆ) விற்பனை இ) ஒரே மாதிரியான பண்டங்கள் ஈ) ஏதுமில்லை

II. கோடிட்ட இடத்தை நிரப்புக : 12 × 1=12

15. உற்பத்தி எனப் பிரிவது ----- உருவாக்குவதாகும்.
16. பலதரப்பட்ட செல்வத்திற்கு எடுத்துக்காட்டு -----.
17. சமதர்ம பொருளாதாரத்தின் முக்கிய நோக்கம் -------.
18. மார்ஷலின் பயன்பாட்டு அணுகுமுறை என்பது ---- பகுப்பாய்வாகும்
19. சமநோக்கு வளைகோடு மையத்தை நோக்கி ----- காணப்படும்
20. தனிநபர் நுகர்வு அட்டவணைகளை ஒன்று சேர்க்கும்போது ----- ஆகும்.
21. விலை மாற்றத்தால் ஏற்படும் அளிப்பு மாற்ற வீதம் ---- எனப்படும்.
22. ----- விலையில் எந்த சக்தியும் விலையோ அளவையோ மாற்ற முடியாது
23. ----என்பது வேறு பல பண்டங்களை உற்பத்தி செய்திட மனித முயற்சிகளால் உருவாக்கப்பட்டது
24. மாறாக்காரணிகள் மற்றும் மாறும் காரணிகளை ----ல் மட்டுமே வேறுபடுத்த இயலும்
25. இறுதிநிலை செலவு வளைகோடானது ----- வடிவத்தில் இருக்கும்
26. நிறைவுப் போட்டியில் நிறுவனங்கள் ----- பொருளையே உற்பத்தி செய்கிறது

III கீழ்வருவனவற்றைப் பொருத்துக : 12 × 1=12

| | | |
|---|---|---|
| 27. செல்வம் | - | மார்ஷல் |
| 28. தனியார் சொத்துரிமை | - | நிறைவுப்போட்டி |
| 29. பொருளாதார கோட்பாடுகள் | - | இருப்பு |
| 30. விலை தேவை நேரடியான உறவு | - | ஆடம்ஸ்மித் |
| 31. Ed>1 | - | தலையிடாக் கொள்கை பொருளாதாரம் |
| 32. நீண்டகால அளிப்புக்கோடு | - | மிகை தேவை நெகிழ்ச்சி |
| 33. வேலைப்பகுப்பு முறை | - | TR–TC |
| 34. உற்பத்திச் சார்பு | - | தங்கம் மற்றும் வெள்ளி |
| 35. MCn | - | அதிகம் நெகிழ்ச்சியுடையது |
| 36. இலாபம் | - | வெப்ளன் விளைவு |
| 37. உலக அங்காடி | - | TCn–TCn-1 |
| 38. நுகர்வோர் கோலோச்சும் | - | காப் டக்லஸ் |

திருப்புக

IV. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக : 12 x 1=12

39. பொருளாதாரத்தின் வேறு பெயர் என்ன ?
40. எக்னாமெட்ரிக்ஸ் எனப்படுவது எந்தெந்த பாடங்களை உள்ளடக்கியது ?
41. பழமைப் பொருளாதாரம் ஓர் தன்னிறைவுப் பொருளாதாரமா ?
42. பயன்பாட்டை வரையறு.
43. சமநோக்கு வளைகோட்டுத் தொகுதி என்றால் என்ன ?
44. பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படை எடுகோள்கள் யாவை ?
45. வருமானத் தேவை நெகிழ்ச்சி என்றால் என்ன ?
46. பொதுசமநிலை என்றால் என்ன ?
47. அகச்சிக்கனங்கள் எவ்வாறு தோன்றுகிறது ?
48. காப்-டக்லஸ் உற்பத்தி சார்பினைக் கூறுக.
49. சமமுறிவுப் புள்ளி என்றால் என்ன ?
50. MRTP சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது ?

## பகுதி-ஆ

10 x 3=30

குறிப்பு : 1. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.
2. ஒவ்வொரு விடையும் நான்கு அல்லது ஐந்து வரிகளில் அமைந்திட வேண்டும்

51. பொருளாதாரம் பற்றிய ஆல்பிரட் மார்ஷலின் இலக்கணம் யாது ?
52. பொருளாதாரத்தின் முக்கிய பிரிவுகள் யாவை ?
53. பொதுவான பொருளாதார முறைகளின் பெயர்களைக் கூறுக.
54. பொதுவுடைமையின் அடிப்படைச் சிறப்பம்சங்களைக் கூறுக.
55. சமநோக்கு வளைகோட்டின் பண்புகள் யாவை ?
56. மார்ஷலின் கூற்றுப்படி நுகர்வோர் உபரியைக் கூறுக.
57. தேவை என்பது என்ன ?
58. கிஃபன் புதிரைப் பற்றி சிறுகுறிப்பு வரைக.
59. அளிப்புக்கோடு இடம் பெயர்தலுக்கான காரணிகள் யாவை ?
60. அங்காடிக்காலம் சிறுகுறிப்பு வரைக.
61. உழைப்பு வரையறு.
62. மூலதனத்தின் வடிவங்கள் யாவை ?
63. இறுதிநிலைச் செலவு என்றால் என்ன ?
64. MC மற்றும் AC இடையேயுள்ள உறவுகளைக் கூறுக.
65. அங்காடியின் பண்புகள் யாவை ?

## பகுதி-இ

6 x 10=60

குறிப்பு : 1. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி.
2. ஒவ்வொரு விடையும் ஒருபக்க அளவில் அமைந்திட வேண்டும்

66. கலப்புப் பொருளாதாரத்தின் நன்மை, தீமைகளை விவரி.
67. பிறவாய்ப்புச் செலவை உதாரணத்துடன் விளக்குக.
68. குறைந்துசெல் பயன்பாட்டு விதியின் முக்கியத்துவத்தை எழுதுக.
69. தேவைக்கோடு இடம்பெயர்தலை வரைபடத்துடன் விவரி.
70. அங்காடிக் காலத்தில் சமநிலை விலை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது ?
71. வேலைப் பகுப்பு முறையின் சிறப்புகளையும் குறைகளையும் விளக்குக.
72. தொழில் முனைவோரின் பணிகள் யாவை ?
73. நீண்டகால சராசரி செலவு வளைகோடு பற்றி குறிப்பு வரைக.
74. AR மற்றும் MR கோடுகளின் இடையேயான உறவுகளை எழுதுக.
75. முற்றுரிமையைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் யாவை ?

## பகுதி-ஈ

3 x 20=60

குறிப்பு : 1. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.
2. ஒவ்வொரு விடையும் மூன்று பக்க அளவில் அமைந்திட வேண்டும்

76. பொருளாதாரமும் பிற சமூக இயல்களுடன் உள்ள தொடர்பினை விவாதிக்கவும்
77. பொருளாதார விதிகளின் தன்மை மற்றும் முக்கியத்துவத்தை விவாதிக்கவும்.
78. மனித விருப்பங்களின் பண்புகள் யாவை ?
79. குறைந்து செல் பயன்பாட்டு விதியினை படம் வரைந்து விளக்கவும்.
80. தேவை விதியினை விவரமாக எழுதுக.
81. முற்றுரிமையில் விலை மற்றும் பண்பும் எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதை விவரிக்கவும்

-----